# “ஜூம்லா ஹை...” (மோடி சுட்ட வடைகள்)


‘ஜூம்லா’ என்ற வார்த்தையை இந்தியா முழுதும் பிரபலமாக்கிக் கொண்டிருக்கிறார்; நமது பிரதமர் மோடி! பத்தாண்டுகளுக்கு முன் தேர்தல் பிரச்சாரத்தில் மோடி கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று, பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தைக் கண்டுபிடித்து வெளியே கொண்டு வருவோம்! அந்தப் பணம் அத்தனையும் வெளியே வந்தால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் கிடைக்கும்! எனத் தனது இரு கைகளையும் உயர்த்தி தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் மேடைக்கு மேடை பேசினார்.

**பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்து ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஓடிவிட்ட நிலையில் பத்தாண்டுகளுக்கு முன் தந்த அந்த வாக்குறுதியின் கதி என்ன ஆயிற்று என்றால், மோடி வாய் திறப்பதில்லை! ‘மோடி அப்படி எல்லாம் பேசவில்லை, பேசியதற்கு ஆதாரம் இருக்கிறதா?’ என்று தமிழ்நாட்டு பா.ஜ.க. தலைவிகளில் ஒருவரான வானதி, மோடிக்கு வக்காலத்து வாங்க நினைத்தார்! அது சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாகி விட்டது.**

**வானதி ஆதாரம் கேட்டதும் நமது நெட்டிசன்கள், மோடி தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசிய பழைய வீடியோக்களை வலைதளங்களில் சரமாரியாக வெளியிடத் தொடங்கினர்!**

மக்கள் மறந்து போயிருந்த மோடியின் ‘ஜூம்லா’ பேச்சுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைகட்டி பவனி வந்தன! ஆதாரம் கேட்ட வானதி போன்றவர்கள் பின்னர், வாயைத் திறக்கவே இல்லை! அப்படி வந்த ஆதாரங்களில் ஒன்று,






‘நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்றே நினைக்கவில்லை!’ - கட்கரி தந்த பேட்டி

மோடியின் நிழலாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் உள்துறை அமைச்சர் அமித்ஷா, இந்தி செய்திச் சேனல் ஒன்றுக்குத் தந்த பேட்டியாகும்! அமித்ஷா அந்தப் பேட்டியில் மோடியின் திருகுதாளத்தை பகிரங்கமாகப் போட்டு உடைக்கிறார்.

**நெறியாளர்: (அமித்ஷாவிடம்) மோடி வாக்குறுதி அளித்த ரூபாய் 15 லட்சம் ஏன் வங்கிக் கணக்கில் வரவில்லை?**

**அமித்ஷா: தேர்தலுக்காக அப்படிச் சொல்லப்பட்டது. ரூ.15 லட்சம் போட சாத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். இந்த நாட்டு மக்களுக்கும் நன்றாகத் தெரியும்! இது ‘ஜூம்லா ஹை’ (பொய் வாக்குறுதி)**

**–அன்று வாக்குறுதி கொடுத்தவர் இன்றைய இந்தியப் பிரதமர்! அந்த வாக்குறுதியை ‘ஜூம்லா’ (பொய் வாக்குறுதி) என்று வருணித்தவர், இந்தியாவின் இன்றைய உள்துறை அமைச்சர்!**

‘ஜூம்லா’ என்பது பலருக்குப் புரியாத வார்த்தை. “ஓ, அதுவா? சும்மானாச்சுக்கும் சொன்னேன்... அதை உண்மை என்று நம்பி ஏமாந்துட்டியா?...” என்று நமது ஊர்களில் சிலரை ஏமாற்றியவர்கள், ஏமாற்றப்பட்டவர்கள் விழித்துக் கொண்ட பின் கூறித் தப்பிக்கும் வார்த்தைப் பிரயோகமான, ‘சும்மானாச்சுக்கும்’ என்பதை ஒத்ததுதான்; இந்த ‘ஜூம்லா’!

மோடி விட்ட ஜூம்லாவை அமித்ஷா மட்டும் உறுதி செய்யவில்லை! மற்றொரு பி.ஜே.பி.யின் முக்கியப் பிரமுகர் நிதின் கட்கரியும் ‘அது உண்மைதான்’ என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

நிதின் கட்கரி இன்றைய மோடி அரசின் அமைச்சர்களில் ஒருவர்! அடுத்த பி.ஜே.பி.யின் பிரதமராக அவரைக் கொணர ஆர்.எஸ்.எஸ். தலைமை முயற்சி செய்வதாக அவ்வப்போது செய்திகள் கசிந்து வரும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்.

அவர் ஒரு மராத்தி செய்தி ஊடகத்துக்குப் பேட்டி அளித்துள்ளார்! மோடிக் கூட்டம் தேர்தலுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகள் பற்றி அவர் கூறியதைக் கேளுங்கள்.

**“நாங்கள் ஒரு காலத்தில் பதவிக்கு வர மாட்டோம் என்பதில் உறுதியாக இருந்ததால், பெரிய பெரிய வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப் பட்டோம். ஆனால் இப்போது நாங்கள் அதிகாரத்துக்கு வந்துவிட்டோம். பொது மக்கள் நாங்கள் தந்த வாக்குறுதிகளை நினைவுபடுத்துகிறார்கள். நாங்கள் சிரித்துக்கொண்டே அதனைக் கடந்து போகிறோம்!”**

மோடி தந்த வாக்குறுதிகளின் இலட்சணம் இப்படி சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது! ஏமாற்றுப் பேர்வழிகளின் கையில் இந்த நாடு சிக்கிச் சீரழிந்து கொண்டிருப்பதை நமது ‘நெட்டிசன்கள்’ ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி அவர்களது முகமூடிகளைக் கிழித்தெறிந்து கொண்டிருக்கின்றனர். அதற்காகவெல்லாம் நமது பிரதமர் மோடி அசந்து விடவில்லை.

**தேர்தலுக்கு முன், பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு என்றார்? அது என்ன ஆயிற்று என்றால், நிதின் கட்கரி கூறியதுபோல சிரித்துக் கொண்டுகூட கடந்து போகவில்லை; அதனைக் காதில் வாங்காது கடந்து செல்கிறார்! “விவசாய வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம் என்றீர்களே, என்ன ஆயிற்று?” என்றால், பதிலே கூறாமல் அடுத்த ஜூம்லாவுக்குத் தாவுகிறார்!**

**பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் விலைகளைக் குறைப்போம் என இரு கைகளையும் உயர்த்தி வாக்குறுதி கூறினீர்களே; எல்லாமே இப்போது முன்பிருந்ததைவிட மூன்று நான்கு மடங்கு உயர்ந்து மக்களை மூச்சு முட்ட வைத்துக் கொண்டிருக்கிறதே என்றால், அது குறித்து மூச்சு விடுவதில்லை!**

**‘புல்லட் ரயில்’ இந்தியாவின் குறுக்கும் நெடுக்கமாக ஓடும். சொந்த வீடு இல்லாத இந்தியனே இல்லை என்ற நிலை உருவாக்குவோம், என அடுக்கடுக்காய் வாக்குறுதி தந்தீர்களே, 10 ஆண்டுகள் உங்கள் ஆட்சியில் அது என்ன ஆயிற்று?’ என்றால், வாயில் ‘பிளாஸ்திரி’ போட்டு ஒட்டிக்கொள்கிறார்!**

**புல்லட் டிரெயின் போல முகமூடி போட்டு ஓடிக்கொண்டிருக்கும் ‘வந்தே பாரத்’தை காட்டுகிறார்!**

வாரிசு அரசியல் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று முழங்குகிறீர்கள், ஆனால் ஒரு பெரிய வாரிசு அணிவகுப்பே உங்கள் கட்சியில் உள்ளதே. ஆபத்து ஏற்படாதா? - எனப் பட்டியலிட்டால், பதிலளிக்காது அடுத்த ‘ஜூம்லா’வுக்குத் தாவுகிறார்!

ஊழலை ஒழிக்க வேண்டும் என்று பத்தாண்டு காலமாக கூறிக்கொண்டு, திருடன் ஒருவன், ‘அதோ திருடன் ஓடுகிறான் பிடியுங்கள்’ என்று கூக்குரலிட்டு ஓடுவது போல ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்; கரைபுரண்டு பா.ஜ.க. ஆட்சியில் ஓடும் ஊழல் சாக்கடைகள் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுக்கின்றன.

**ரஃபேல் ஊழல், அமித்ஷாவின் மகனின் சொத்து மதிப்பு பா.ஜ.க. அரசு பதவி ஏற்றபின் ஒரே ஆண்டில் 16,000 மடங்கு உயர்ந்துள்ளது. சி.ஏ.ஜி., தற்போது சாலை போடுவது, சுங்க வசூல்களில் நடைபெற்றுள்ள ஊழல்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளது.**




பி.ஜே.பி. ஆண்ட, ஆளும் மாநிலங்களில் அடுக்கடுக்காய் ஊழல்கள், இவற்றை எல்லாம் ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினால் எதையும் பொருட்படுத்துவதில்லை!

தேர்தலுக்கு முன் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது, தேர்தல் முடிந்தபின் “ஜூம்லா ஹை” - என்று கூறி, வாக்களித்தவர்களை நொந்து நோகடித்துக் கொண்டிருக்கிறீர்கள்!

இப்போது இன்னும் சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கும் நிலையில், சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியுடன், வாடிக்கையான ‘ஜூம்லா’ கொடியையும் பறக்க விட்டிருக்கிறீர்கள்.

பி.ஜே.பி. ஆட்சியில் நாடெங்கும் பாலும் தேனும் ஓடுவது போலவும், மக்களெல்லாம் அடுத்த ஆட்சியை பா.ஜ.க.விடம் தருவது போலவும், அடுத்த ஆண்டு செங்கோட்டையில் தானே கொடி ஏற்ற இருப்பதாகவும் கூறுகிறார் பிரதமர்! பிரதமர் பேசும் அதே நாள் காலை ஏடுகளை அவர் படித்தாரா என்றே தெரியவில்லை.



Retail inflation hits 15-mth high on veg prices; food inflation in double digits

TIMES NEWS NETWORK

New Delhi: Retail inflation soared to a 15-month high in July as food prices jumped sharply, hit by supply woes, posing a fresh challenge for authorities battling stubborn prices.

▶Re breaches 83, RBI pulls it back, OTHER BOOK, P 11

...nal Statistical Office (NSO) on Monday showed retail inflation as measured by the consumer price index (CPI) rose an annual 7.4% in July from the previous month's 4.9%. This is the highest since the 7.8% increase in April 2022. The food price index moved into double digits at 11.5% from 4.6% in June.

▶More on OTHER BK, P 11


Exports down 16% to $32bn in July

India's exports contracted by 15.9% to $32.3 billion in July due to global demand sl... down and fall in the ... shipments of ...oleum, gems and jew...ry. Imports in J... also declined by 17% to $52.9bn. Other book, P 11

“காய்கறிகளின் விலை ஏற்றம் சில்லறை விலையில் கடந்த 15 மாதங்களில் இல்லாத உச்சத்தைத் தொட்டது. உணவுப் பொருள்கள் விலை உயர்வு இரட்டை இலக்கத்தை எட்டியது.” இத்தகவலை எதிர்க்கட்சிகள் கூறவில்லை. தேசிய புள்ளியியல் அலுவலகமே (National Statistical Office) தந்து அது ஏடுகளில் வெளிவந்துள்ளது. இந்தியாவின் ஏற்றுமதி 15 சதவீதம் ஜூலை மாதத்தில் குறைந்து விட்டது என்றும் அந்தப் புள்ளி விபரம் தெரிவிக்கிறது! பி.ஜே.பி. ஆட்சிக்கு வருமுன் அமெரிக்க டாலரின் மதிப்பு, அதாவது 2013ல் 59லிருந்து 61 ரூபாயாக இருந்தது. இன்று இந்திய ரூபாய் மதிப்பிழந்து, ஒரு அமெரிக்க டாலருக்கு 83 ரூபாய்க்கு மேல் ஆகிவிட்டது!

ஆட்சிக்கு வருமுன் ரூபாய் மதிப்பை உயர்த்துவோம் என்று உறுதிமொழி கொடுத்தனர்; அதுவும் “ஜூம்லா ஹை” ஆகிவிட்டது!

**பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தபின் நாட்டில் பொருளாதாரம் வளரவில்லை. விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒரு சில கார்ப்பரேட் முதலாளிகள் தவிர, மற்ற அனைத்துத் தரப்பினரும் அதாவது, ஏழை எளிய, நடுத்தர, உயர்மட்டம் என அனைத்துத் தரப்பு மக்களும் அல்லல்பட்டு ஆற்றாது அழுது கொண்டிருக்கின்றனர்! எழுந்துள்ள இனக் கலவரங்களால்**




‘மோடி கூறியது ‘ஜூம்லா’ வாக்குறுதி!’ - அமித்ஷா பேட்டி

**பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களான மணிப்பூர், ஹரியானா பகுதிகளில் மரண ஓலங்கள் தொடர்ந்து கேட்கின்றன! அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் எழுப்ப நடத்திய வெறித்தாக்குதல்களால் நடந்த கலவரத்தால் ஏற்பட்ட இரத்தவாடை அடங்கவில்லை!**

பிணக்குவியல் மீது ராமர் கோவில் எழுப்பப்படுகிறது. ராமர் பெயரில் அங்கும் ஊழல் பேய் தலைவிரித்தாடுகிறது; இந்த நிலையில் மக்களிடம் மதவெறி உணர்வைத் தூண்டிடும் வகையில் கிருஷ்ண ஜென்மபூமியின் ஒரு பகுதியில் மசூதி அமைந்துள்ளதாகக் கூறி போராட்டங்கள்; வழக்குகள். அன்று ராமர், இன்று கிருஷ்ணர் என, மதவெறியாட்டம் தூண்டப்பட்டு அதன் மூலம் எரியும் நெருப்பில் குளிர்காயத் தொடங்கிவிட்டது பி.ஜே.பி.!

மோடியின் ‘அச்சே தின்’ பேச்சை நம்பி வாக்களித்தவர்கள் ‘போச்சே பொழப்பு’ - எனப் புலம்பத் தொடங்கியுள்ளனர்!

தமிழகம் வந்தபோதெல்லாம் மதுரையில் எய்ம்ஸ், ராமேஸ்வரம் சர்வதேச சுற்றுலாத் தலமாக மாற்றப்படும் போன்ற ஜூம்லாக்களுக்கும் பஞ்சமே இல்லை!

மோடி தமிழகம் வந்த போதெல்லாம் ‘சுட்ட வடை’களைப் பட்டியல் போட்டுள்ளார் கழகத் தலைவர் தளபதி! வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி மோடி விடப் போகும் ஜூம்லாக்கள், கழகத் தலைவர் தளபதி கூறியபடி, சுடப்போகும் வடைகளுக்குப் பஞ்சமே இருக்காது! மோடி அவர்களைப் பொறுத்தவரை, அவர் மக்கள் மத்தியில் ‘ஜூம்லா’ மோடியாகி விட்டார்!

**பொய்யிலே பிறந்து பொய்யிலே வாழ்ந்து பொய்யிலே அரசியல் நடத்தும் இந்தக் கொடுங்கோலர்களை தூக்கி எறியுங்கள்!**

**Throw the Tyrants out.**